உ

பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின்
உபகோயில்களான

## அருள்மிகு உத்தர விநாயகர், அருள்மிகு கோசலை விநாயகர், மற்றும் அருள்மிகு அபரஞ்சி விநாயகர் திருக்கோயில்களின்

# திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா

# அழைப்பிதழ்



திருவள்ளுவராண்டு 2048 துர்முகி வருடம் பங்குனி மாதம் 20-ம் நாள்
திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா

02-04-2017

(ஞாயிற்றுக்கிழமை)

காலை 6.00 மணிக்குமேல் 6.55 மணிக்குள்

## ஸ்ரீ விநாயகர் துதி

உம்பர் தரு தேனு மணிக் கசிவாகி
ஒண் கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தே பருகிப் பலகாலும்
என்றனுயிர்காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காக வனத் தணைவோனே
தந்தை வலத் தால ருள் கைக் கனியோனே
அன்பர் தமக் கான நிலைப் பொருளோனே
ஐந்து கரத் தானை முகப் பெருமானே.

அருணகிரிநாதர்

ஆனைமுகனை துதிக்கும் ஆன்மீக அன்பர்களே,

வளமை, வனப்பு மதி துதி பங்கய மங்கை யென்ப வளமை வனப்பு விவரமா தருள்கதி வந்துறுங்க வளமை வனப்பு கரி ப முகன்து ணை வள்ளல் தன் வளமை வனப்புப்புனிதச் சிவவெற்பாகிய பழநியம்பதி பரமன் உறையும் திருமலையை வலம் வந்தால் செழுமை, அழகு, அறிவு, புகழ், தனம், தானியம், நன்னெறியாவும் அருளும் அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருவருள் பெருங்கருணை துணைகொண்டு பழநி அருள்மிகு பெரியநாயகி அம்மன் திருவருள் பாலிக்கும் **ஊர்க்கோயிலின் நடேசர் சந்நிதி வீதி அருள்மிகு உத்தர விநாயகர், அருள்மிகு கோசலை விநாயகர் மற்றும் மேற்கு ரத வீதி கன்னி மூலை அருள்மிகு அபரஞ்சி விநாயகர்** ஆகிய வேழமுகத்தண்ணல் அருளாட்சி செய்யும் திருக்கோயில்களின் அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகவிழா நிகழும் சுபஸ்ரீ துர்முகி வருடம், பங்குனி மாதம் 20- ஆம் நாள் (2-4-2017) ஞாயிற்றுக்கிழமை ரோகிணி நட்சத்திரமும், சஷ்டி திதியும், சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 6.00 மணிமுதல் 6.55 மணிக்குள் மீன லக்னத்தில் நிகழ்ச்சி நிரலின் வண்ணம் மஹாகும்பாபிஷேகம் நிகழ்வுற திருவருள் கூட்டிவித்துள்ளது.

இவ்விழாவில்

திரு. **திண்டுக்கல் சி.சீனிவாசன்** அவர்கள்
மாண்புமிகு வனத்துறை அமைச்சர்

திரு. **சேவூர். எஸ்.ராமச்சந்திரன்** அவர்கள்
மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்

திரு. **அபூர்வவர்மா** இ.ஆ.ப. அவர்கள்
முதன்மை செயலாளர், சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை.

முனைவர் திரு. **எம்.வீர சண்முக மணி** அவர்கள்
ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை

டாக்டர். திரு. **டி.ஜி.வினய்** இ.ஆ.ப. அவர்கள்
மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல்

திரு. **எம்.உதயகுமார்** அவர்கள்
நாடாளுமன்ற உறுப்பினர், திண்டுக்கல் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள்

திரு. **இ.பெ.செந்தில்குமார்** அவர்கள்
சட்டமன்ற உறுப்பினர், பழனி.

டாக்டர். **எஸ்.வினீத்** இ.ஆ.ப. அவர்கள் சார் ஆட்சியர், பழனி

திருமதி. **ந.திருமகள்** அவர்கள்
கூடுதல் ஆணையர் (பொது), இந்து சமய அறநிலையத்துறை, சென்னை

திருமதி. **மா.கவிதா** அவர்கள் கூடுதல் ஆணையர் (திருப்பணி),
இந்து சமயஅறநிலையத்துறை, சென்னை

மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். தாங்களும் மஹா கும்பாபிஷேக விழா மங்கலத்தில் கலந்து கொண்டு ஸ்ரீ விநாயகப் பெருமானின் திருவருளை பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

**இரா.மேனகா,**
உதவி ஆணையர் / நேர்முக உதவியாளர்
துணை ஆணையர், (முழு கூடுதல் பொறுப்பு)

**க.இராஜமாணிக்கம்,**
இணை ஆணையர் / செயல் அலுவலர் / தக்கார்

# நிகழ்ச்சி நிரல்

## ஸ்ரீ துர்முகி வருடம்

| | | |
|---|---|---|
| பங்குனி - 19 (01-04-2017) சனிக்கிழமை | காலை 8.40 மணிக்கு | அருள்மிகு அபரஞ்சி விநாயகர் திருக்கோவிலில் அனுக்ஞை, விநாயகர் பூஜை, புண்யாஹவாசனம், பஞ்சகவ்யம், ஸ்ரீ கணபதி ஹோமம், பூர்வாங்க பூஜைகள் |
| | பிற்பகல் 3.15 மணிக்கு | அருள்மிகு உத்தர விநாயகர், அருள்மிகு கோசலை விநாயகர், அருள்மிகு அபரஞ்சி விநாயகர் திருக்கோயில்களில் மூலவருக்கு அஷ்டபந்தன மருந்து சாற்றுவதற்கு ஆரம்பம். |
| | மாலை 4.00 மணிக்கு | அருள்மிகு உத்தரவிநாயகர், அருள்மிகு கோசலை விநாயகர், அருள்மிகு அபரஞ்சி விநாயகர் ஆகிய மூன்று திருக்கோயில்களில் வாஸ்து சாந்தி, மிருத்ஸங்கிரஹணம், அங்குரார்பணம்,ரக்ஷாபந்தனம். |
| | மாலை 6.00 மணிக்கு | அருள்மிகு பெரியநாயகியம்மன் திருக்கோயிலில் அருள்மிகு முத்துக்குமாரசாமி மண்டபத்தில் கும்பாலங்காரம், கலாகர்ஷணம், யாத்ராதானம், கலசங்கள் மூன்று விநாயகர் திருக்கோயில்களுக்கும் புறப்பாடு. யாகசாலை பிரவேசம், முதற்கால பூஜை, திருமறை, திருமுறை பாராயணங்கள். |
| | இரவு 8.00 மணிக்கு | திரவியாஹுதி. |
| | இரவு 8.30 மணிக்கு | அருள்மிகு உத்தரவிநாயகர் திருக்கோயிலில் முதற்கால பூர்ணாஹுதி தீபாராதனை, உபசாரம். |
| | இரவு 9.00 மணிக்கு | அருள்மிகு கோசலை விநாயகர் திருக்கோயிலில், முதற்கால பூர்ணாஹுதி, தீபாராதனை, உபசாரம். |
| | இரவு 9.30 மணிக்கு | அருள்மிகு அபரஞ்சி விநாயகர்திருக்கோயிலில், முதற்கால பூர்ணாஹுதி, தீபாராதனை, உபசாரம். |
| பங்குனி - 20 (02-04-2017) ஞாயிற்றுக்கிழமை | அதிகாலை 4.00 மணிக்கு | அருள்மிகு உத்தர விநாயகர், அருள்மிகு கோசலை விநாயகர் அருள்மிகு அபரஞ்சி விநாயகர் ஆகிய மூன்று திருக்கோயில்களிலும் 2 ஆவது கால யாகபூஜை ஆரம்பம். பிம்பசுத்தி, ரக்ஷாபந்தனம், நாடீ சந்தானம், ஸ்பர்சாஹுதி, திரவியாஹுதி |
| | காலை 5.40 மணிக்கு | அருள்மிகு உத்தர விநாயகர், அருள்மிகு கோசலை விநாயகர், அருள்மிகு அபரஞ்சி விநாயகர் ஆகிய மூன்று திருக்கோயில்களிலும் 2ஆவது கால பூர்ணாஹுதி. |

| | | |
|---|---|---|
| | காலை 6.15 மணிக்கு | நடேசர் சன்னதி வீதி அருள்மிகு உத்தர விநாயகர் விமான மஹாகும்பாபிஷேகம் உடன் மூலஸ்தான விநாயகர் மஹாகும்பாபிஷேகம், மஹாதீபாராதனை. |
| | காலை 6.30 மணிக்கு | நடேசர் சன்னதி வீதி அருள்மிகு கோசலை விநாயகர் விமான மஹாகும்பாபிஷேகம் உடன் மூலஸ்தான விநாயகர் மஹாகும்பாபிஷேகம், மஹாதீபாராதனை. |
| | காலை 6.45 மணிக்கு | மேற்கு ரத வீதி அருள்மிகு அபரஞ்சி விநாயகர் விமான மஹாகும்பாபிஷேகம் உடன் மூலஸ்தான விநாயகர் மஹாகும்பாபிஷேகம், மஹாதீபாராதனை, உபசாரம் மஹா கும்பாபிஷேகம் பிரசாதம் வழங்குதல். |
| | காலை 9.00 மணிக்கு | மூன்று விநாயகர் திருக்கோயில்களிலும் மஹாபிஷேகம், அலங்காரம், தீபாராதனை, உபசாரம், பிரசாதம் வழங்குதல். |

பிரதான ஆசார்யர்:
சிவஸ்ரீ. **க.அமிர்தலிங்க குருக்கள்**
ஸ்தவராஜ பண்டிதர் (பொ.)
திருக்கோயில், பழநி.

சர்வ சாதகம்:
பழநி அருள்மிகு தண்டாயுதபாணி ஸ்வாமி
தேவஸ்தான அர்ச்சக ஸ்தானீகர்,
சிவாகம சிரோமணி, ஆகம வித்யாரத்னம்,
சிவாகம கல்பதரு
சிவஸ்ரீ. **அ.செல்வசுப்ரமண்ய குருக்கள்**

**வேள்விச் சாலை வழிபாட்டு நேரங்களில் திருமறை, சிவாகமங்கள், திருமுறைகள் முதலியன தொடரோதுதல் நடைபெறும்.**



